# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM I

C 8102184

1. District மாவட்டம் : விருதுநகர் PS காவல்நிலையம்: ஊ.த.த பிரிவு விருதுநகர் Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 04/2023 Date நாள்: 14.06.2023

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as Amended in 2018.

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 13.06.23 Date to நாள் வரை : —
   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 1800 hrs Time to நேரம் வரை : —

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.06.23 Time நேரம் : 09.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் : —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திருச்சுழி நீதிமன்றம் அருகில் சுமார் 35 கி.மீ கிழக்கு.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் செந்தூர் செல்வன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் குண்டுமலை

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 03.06.1966 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி 170, மேலத்தெரு, தச்சனேந்தல், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. ராமநாராயணன், காவல் ஆய்வாளர், நரிக்குடி காவல் நிலையம், திருச்சுழி உட்கோட்டம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (கு.இராமசந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்) இன்று 14.06.2023 காலை 09.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், தச்சநேந்தல், மேலத்தெரு, கதவு எண்.170 என்ற முகவரியைச் சேர்ந்த திரு.குண்டுமலை என்பவரின் மகன் திரு.செந்தூர் செல்வன் என்பவர் என் முன்பாக ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, மேற்படி மனுமீது இரகசியமாக விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகளும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 14.06.2023 முற்பகல் 11.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.ராம்நாராயணன், காவல் ஆய்வாளர், நரிக்குடி காவல் நிலையம், திருச்சுழி உட்கோட்டம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2023 பிரிவு ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018)-இன்படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கு. செந்தூர்செல்வன் 14.6.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

14.06.23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.06.2023 at 1530 hrs.

Name: பெயர் கு. இராமசந்திரன்
Rank: நிலை கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு விருதுநகர் (OD)

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.04/2023 பிரிவு 7 of Prevention of Corruption Act-1988 as Amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

விபரம் பின்வருமாறு அனுப்புநர்:- கு.செந்தூர் செல்வன், வயது 57/2023, த/பெ.குண்டுமலை, எண் 170 மேலத்தெரு, தச்சனேந்தல், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம், பெறுநர்:- கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா:- நான் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், தச்சனேந்தல் கிராமத்தில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். தாமரைக்குளம் கண்மாயில் அமைந்திருக்கும் ஸ்ரீ சந்தனக் கருப்பனசுவாமி, ஸ்ரீ முனியப்பசுவாமி கோவில் பெட்டி எடுப்பு (களரி) உற்சவ விழாவை முன்னிட்டு தச்சனேந்தல் அழகப்பத்தேவர் வகையறாக்கள் நாங்கள் வருகிற 15.06.2023 தேதி முதல் 17.06.2023 தேதி வரை நடத்தும் திருவிழாவிற்கு அனுமதி வழங்கவும், ஒளிபெருக்கி வைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கவும் கேட்டு திருவிழா அழைப்பிதழ், ஒலி பெருக்கி விண்ணப்பத்துடன் ஒரு மனுவை எங்கள் வகையறாக்கள் சார்பாக என் பெயரில் தயார் செய்து எடுத்துக் கொண்டு, இன்று 13.06.2023 மாலை சுமார் 05.00 மணியளவில் நரிக்குடி காவல் நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது நரிக்குடி காவல் நிலையத்திற்கு வெளியே மெயின் ரோட்டில் மேற்கு பக்கம் திரும்பி நின்று கொண்டிருந்த நரிக்குடி காவல் நிலைய போலிஸ் ஜீப்பில் காவல் ஆய்வாளர் திரு ராம்நாராயணன் அவர்கள் அமர்ந்து அவரது போனில் யாரிடமோ பேசிக்கொண்டிருந்தார். அப்போது நான் அந்த ஜீப் அருகே நின்று கொண்டு, அவர் போன் பேசி முடித்ததும், அவரிடம் எங்கள் கோவிலில் திருவிழா நடத்தும் மேற்சொன்ன விபரத்தை சொல்லி, நான் கையில் வைத்திருந்த திருவிழாவிற்கு அனுமதி வழங்கவும், ஒலிபெருக்கி வைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கவும் கேட்டு, திருவிழா அழைப்பிதழ், ஒலி பெருக்கி அனுமதி விண்ணப்பத்துடன் கூடிய மேற்படி மனுவையும் அத்துடன் மரியாதை நிமித்தமாக, ஆப்பிள், ஆரஞ்சு, பழங்கள் அடங்கிய பையும் அவரிடம் கொடுத்தேன். அவர் அவற்றை, வாங்கி வைத்துக்கொண்டு அந்த மனுவையும் திருவிழா அழைப்பிதழையும் படித்துபார்த்துவிட்டு, மனுவை மட்டும் கொடுக்குறீகளே, வேறு ஏதும் கவனிப்பு இல்லையா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், திருவிழாவிற்கு வாங்க சார் உங்களுக்கு அனைத்து மரியாதையும் செய்றோம் என்று சொன்னேன். அதற்கு அவர் இப்ப நான் கோர்ட்டுக்கு அவசரமா போறேன், திருச்சுழி கோர்ட்டுக்கு வாங்க என்ன கவனிக்கனும்னு சொல்றேன் என்று சொல்லிக்கொண்டே ஜீப்பில் சென்றுவிட்டார். நான் உடனே அங்கிருந்து புறப்பட்டு திருச்சுழி கோர்ட்டுக்கு வந்து, கோர்ட்டுக்கு வெளியே, அவரது அதே ஜீப் நிறுத்தியிருந்த இடத்தில் நான் காத்திருந்தேன். அப்போது மாலை சுமார் 6.00 மணியளவில் காவல் ஆய்வாளர் திரு.ராம்நாரயணன் அவர்கள் திருச்சுழி கோர்ட்டுக்குள்ளேயிருந்து வெளியே வந்து, அவரது அதே ஜீப்பில் ஏறி அமர்ந்திருந்தார். அப்போது நான் அவரிடம், சார் கோர்ட்டுக்கு வர

சொன்னீங்க அதான் வந்தேன் என்று சொன்னதும், அவர் என்னிடம், குலதெய்வ திருவிழாவ உங்க வகையறாக்கள் இவ்வளவு சிறப்பா செலவு செய்து நடத்தும் போது, எனக்கு 5000 ரூபாய் பணத்தை தனியா கொடுக்க முடியாதா, கொடுத்தாதான் நானும் உங்க திருவிழாவிற்கு அனுமதி வழங்கி திருவிழாவிற்கு அனுமதி வழங்கி திருவிழாவிற்கு பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் அப்போது அவரிடம், சார் இப்ப அவ்வளவு பணம் என்னிடம் இல்ல சார், நாளைக்கு பணத்தோட வந்து சார பார்க்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நாளைக்கு வாங்க என்று சொல்லிவிட்டு அங்கிருந்து ஜீப்பில் சென்றுவிட்டார். எங்க குலதெய்வ திருவிழா நடத்துவதற்கு எங்களுக்கு அனுமதி வழங்குவதற்காக என்னிடம் லஞ்சமாக ரூ.5,000/- பணம் கேட்ட நரிக்குடி காவல் ஆய்வாளர் திரு.ராம்நாரயணன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd), கு.செந்தூர் செல்வன். 14.6.2023 Sir, Received the complaint on 14.06.2023 at 09.00 hus. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.4/2023 u/s 7 of P.C. Act-1988 as Amended in 2018 on 14.06.2023 at 11.00 hrs and took up for investigation. (Sd) (K.Ramachandran) 14.06.2023 ADSP / V&AC / VNR (OD).

14.06.23
(K. RAMACHANDRAN)
ADSP / V&AC / VNR (OD)